மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தின் அறிவியல் பூங்கா காலாண்டிதழ்,
பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் BECH-RUSA மையம்
திருவள்ளுவர் இருக்கையின் பன்னாட்டுத் திருக்குறள் அமைப்புகள் இணையம்
இணைந்து நடத்தும்

முப்பெரும் விழா!



அனைத்துக் கல்லூரிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான 23-ஆம் அறிவியல் தெரிவிப்பியல் திறனாய்வு போட்டிகள்

59,60-ஆம் அறிவியல் பூங்கா இதழ் வெளியீடு

அறிவியல் களஞ்சியம் பரிசுகள் மற்றும் பல்வகை விருதுகள் வழங்கும் விழா!

நாள் : வெள்ளிக்கிழமை 28-06-2024
போட்டிகள் நேரம் : காலை 9.00 – 10.00 மணி வரை
முப்பெரும் விழா : காலை 10.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை

நிகழிடம்

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

பேரன்புடையீர், வணக்கம்.

உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் என்னும் உயரிய இலக்குடன் அறிவியலையும் மொழி இயலையும் இரு கண்கள் எனப் போற்றி, மனித வளத்தை மூலதானமாக்கி நாட்டுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்னும் முனைப்பில் 38 ஆண்டுகளாகப் பல அரிய சேவைகளைச் செய்து கொண்டிருக்கும் வருமான வரி விலக்குப் பெற்ற, வானவில் மனித வளமேம்பாட்டுத் தன்னார்வத் தொண்டு நிறுவனம்தான் மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம்!

சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் திருக்குறள் ஒப்பித்தல் போட்டி, அறிவியல் வினாடி-வினாப் போட்டி, அறிவியல் கண்காட்சிகளை நடத்தியதுடன், தமிழ்நாடு மாநிலம் முழுவதும் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, ஈரோடு, கன்னியாக்குமரி மாவட்டங்களில் நடத்தி ரூபாய் 10,00,000/- பரிசுத்தொகை வழங்கியதில் 1,00,000-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரிகளில் திருக்குறள் பேச்சுப்போட்டி, அறிவியல் தெரிவிப்பியல் திறனாய்வுப் போட்டிகளை நடத்தியதில் 10,000-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

மத்திய மாநில அரசு, பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து பல சமூக நலப் பணிகளைத் தொடர்ந்து செயலாற்றி வருகின்றது. குறிப்பாக இந்திய அரசின் அறிவியல் தொழில் நுட்பத் துறையின் நிதி உதவியுடன் 15 ஆண்டுகள் அறிவியல் எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர் களுக்கான பயிலரங்கினைத் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து அரசு பல்கலைக்கழகங்களிலும், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், இலட்சத் தீவுகளில் உள்ள அறிவியல் தொழில் நுட்பத்துறைகளுடன் இணைந்து பயிலரங்குகளை நிகழ்த்தியதில் 5,000-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பயன்பெற்றுள்ளனர்.

கன்னியாக்குமரி முதல் நிஜாமுதீன் வரை செல்லும் விரைவு வண்டிக்குத் திருக்குறள் எக்ஸ்பிரஸ் பெயர் வைப்பதற்கும், அதில் தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் திருக்குறள் ஸ்டிக்கர் ஒட்டியது மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கமே! அதற்கு மூலம் புதுடில்லியில் 2002-இல் 3 நாட்கள் நிகழ்த்திய திருக்குறள் திருவிழா தான்! அண்ணா பல்கலைக்கழகம், தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் உலகத் தமிழராய்ச்சி நிறுவன்ங்களுடன் இணைந்து பன்னாட்டுத் திருக்குறள் மாநாட்டினை 4 நாட்கள் நடத்தி இக்கால உலகிற்குத் திருக்குறள் என்னும் தலைப்பில் மூன்று தொகுதிகளை வெளியிட வகை செய்துள்ளோம்.

1330 அருங்குறட் பாக்கள் அமைந்த 133 அதிகாரங்களையும் 133 இராகங்களில் இசை அமைத்து திருக்குறள் அமுதமொழி இசைச் சொல்லோவியம், திருக்குறள் நெறிமுறைத் திருமணம் மங்கலச் சொல்லோவியம் குறுந்தகடுகளை வெளியிட்டுள்ளோம். திருக்குறள் உயராய்வு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் மூலம் தமிழ்நாடு மாநிலம், தேசிய அளவில் பல கருத்தரங்குகளை நிகழ்த்தி 20-க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளோம். மயிலாப்பூர் அறுபத்துமூவர் திருவிழாவில் இரண்டு நாட்கள் இலவச அவசர மருத்துவ சிகிச்சை முகாம்களை 20 ஆண்டுகளாகச் சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து நடத்துகின்றோம். இலவசத் திருக்குறள் வகுப்பு, ஆளுமை வளர்ச்சிப் பயிலரங்குகள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துடன் இணைந்து 12-க்கும் மேற்பட்ட கருத்தரங்குகளை நடத்தி உள்ளோம். இப்படிப் பல்துறைகளில் நற்பணிகள் பல செய்து வருகின்றோம்.

திருவள்ளுவர் அறிவுக்களஞ்சியம் வளர்ச்சி மையத்தின் மூலம் குழந்தைகள், இளைஞர் மற்றும் மகளிர்க்கான அறிவுக்களஞ்சியம் விருதுப் போட்டிகளை நடத்தி அதில் ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெறுவோர்க்கு ஐந்து அறிவுக்களஞ்சியம் பரிசுகளையும் வாழ்க்கைப் போட்டியில் வெற்றி பெற்ற சாதனையாளர்களை இனங்கண்டு ஐவருக்கு அறிவுக்களஞ்சியம் விருதுகளை வழங்குகின்றோம். ஆண்டுதோறும் குழந்தைகள், இளைஞர்கள், மகளிர், முதியோர் ஆகிய நான்கு வகையினருக்கும் தனித்தனியே அறிவுக்களஞ்சியம் போட்டிகள் நடத்தி அறிவுக்களஞ்சியம் பரிசுகளையும் விருதுகளையும் தொடர்ந்து வழங்கி வருகிறோம்.

28-6-2024 வெள்ளிக்கிழமை அன்று, 59, 60-ஆம் அறிவியல் பூங்கா காலாண்டிதழ் வெளியிட்டு அனைத்துக் கல்லூரிகள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு 23-ஆம் அறிவியல் தெரிவிப்பியல் திறனாய்வுப் போட்டிகள் நடத்தி அறிவியல் களஞ்சியம் பரிசுகள், பல்வகை விருதுகள் வழங்கி மகிழ்கிறோம். இந்தப் பெருவிழாவில் பங்கேற்க அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். வாருங்கள்! வாழ்த்துங்கள்!!

அறிவே ஆற்றல்! அறிவை வளர்ப்போம்! அது நம் தேசத்தை வளப்படுத்தும்!! மேம்படுத்தும்!

விழாக் குழுவினர்.

முப்பெரும் விழா

நிகழிடம்: பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

நாள்: 28–06–2024, வெள்ளிக்கிழமை. **நேரம்:** 10.00 – 12.30 மணி வரை

10–00 தமிழ்த்தாய் வாழ்த்து : பல்கலைக்கழக மாணவிகள்

10–04 திருவள்ளுவர் வாழ்த்து, திருவள்ளுவர் மந்திரம், இளைஞர் உறுதிமொழி

10–15 வரவேற்புரை : பேராசிரியர் முனைவர் ந.பிரசன்னா
இயக்குநர், BECH-RUSA மையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

10–20 அறிமுகவுரை : கலைமாமணி முனைவர் சேயோன்,
மேனாள் இயக்குநர், சென்னை வானொலி
நிறுவனச் செயலாளர், மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம்.

10–25 அறிவியல் பூங்கா குறித்த மாணவர்களின் கருத்துரை

10–35 தலைமை உரை : பேராசிரியர் முனைவர் ம.செல்வம்
துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

10–55 சிறப்புரை : 59,60 ஆம் அறிவியல் பூங்கா இதழினை வெளியிட்டு, விருதுகளை வழங்கிச் சிறப்புரை
மாண்புமிகு நீதியரசர்
டாக்டர் மெ.சொக்கலிங்கம்
மேனாள் நீதிபதி, உயர் நீதிமன்றம், சென்னை.

11–45 வாழ்த்துரை : அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான 20–ஆம் அறிவியல் தெரிவிப்பியல் திறனாய்வுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அறிவியல் களஞ்சியம் பரிசுகளை வழங்கி வாழ்நாள் சாதனையாளர் வாழ்த்துரை

11–55 : பேராசிரியர் முனைவர் ஆர்.காளிதாஸ்
பதிவாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

12–00 : பேராசிரியர் முனைவர் எஸ்.சுதாகரன்
தலைவர், உலக சிலம்பம் விளையாட்டுச் சங்கம், சென்னை.

12–05 ஏற்புரை : விருது பெற்ற வித்தகர்களின் ஏற்புரை

12–25 நன்றியுரை : பேராசிரியர் முனைவர் மு.முத்துவேலு
இணைச் செயலாளர்,
மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கம், சென்னை.

12–30 : நாட்டுப்பண்

நிகழ்ச்சி நெறியாளர் : பேராசிரியர் முனைவர் க.திலகவதி
மேனாள் இயக்குநர், தமிழ்ப் பண்பாட்டு மையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

விருது பெறும் வித்தகர்கள்

வாழ்நாள் சாதனையாளர் விருது

பேராசிரியர் முனைவர் என்.மார்க்கண்டன்

மேனாள் துணைவேந்தர், காந்திகிராமம் – கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

பாவேந்தர் பாரதிதாசன் விருது

பேராசிரியர் முனைவர் க.பழனிதுரை

மேனாள் துறைத் தலைவர், காந்திகிராமம் – கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்

அறிவியல் களஞ்சியம் விருது பெறும் வித்தகர்கள்

திருமிகு. எஸ்.வி.சீனிவாசன்

மேனாள் செயல் இயக்குநர், பாரதமிகு நிலையம், திருச்சிராப்பள்ளி

பேராசிரியர் முனைவர் எஸ்.கண்ணன்

தலைவர், சுற்றுச்சூழல் ஆய்வு, எரிசக்தி மற்றும் இயற்கை வளங்கள் துறை,
மதுரை காமாராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பேராசிரியர் முனைவர் எம்.லோகநாதன்

முதன்மையர், தேசிய உணவுத் தொழில் நுட்பம், தொழில் முனைவு
மற்றும் மேலாண்மை நிறுவனம், தஞ்சாவூர்.

திருமிகு ஆர்.விஜயாலயன்

நிறுவனர், என்.ஆர். ஐ.ஏ.எஸ். அகாடெமி, திருச்சிராப்பள்ளி

அறிவுக்களஞ்சியம் விருது

திருமிகு க.நடராசன்,

மேனாள் இயக்குநர், திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம்.

பேராசிரியர் முனைவர் எம்.சுரேஷ்குமார்

உளவியல் துறை, அமெரிக்கன் கல்லூரி, மதுரை

திருமிகு அ.பொ.சிவகுமார்,

மாவட்ட நூலக அலுவலர், திருச்சிராப்பள்ளி

திருமிகு பூவை. பி.தயாபரன்

தலைவர், திருக்குறள் திருமூலநாதன் அறக்கட்டளை,
புள்ளம்பாடி, திருச்சி

திருக்குறள் நெறிச் சுடர் விருது

திருச்சித் திருக்குறள் பேரவை,

திருச்சிராப்பள்ளி

மணப்பாறை திருக்குறள் பயிற்றகம்,

திருச்சி மாவட்டம்

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்,

திருச்சிராப்பள்ளி

இராசவேலர் செண்பகத் தமிழ் அரங்கு,

திருவரங்கம்.

சேவைச் செம்மல் விருது

அரிமா ஆ.சவரிராஜ் ஆளுநர், பன்னாட்டு அரிமா சங்கம், திருச்சிராப்பள்ளி

திருமிகு. ஆர்.என்.கருணாநிதி நிறுவனர், ஸ்ரீசாய் கிரியேட்டர்ஸ், மதுரை.

பேராசிரியர் முனைவர் இலட்சுமி பிரபா ஒருங்கிணைப்பாளர்,
நாட்டு நலப்பணித் திட்டம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

திருமதி வி.தீபா செயல் இயக்குநர், கங்காரு கருணை இல்லம், திருச்சிராப்பள்ளி